வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.797/ஆ3/2023 நாள்27.07.2023

பொருள் பள்ளிக் கல்வி – தொழிற்கல்வி – சென்னை உயர்நீதி மன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளில் பெறப்பட்ட தீர்ப்பாணைகளை செயல்படுத்திட வேண்டி 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறைசெய்யப்பட்ட அரசு / அரசு உதவிபெறும் / நகராட்சிமேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும்/ஓய்வுபெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் 06.04.2018 பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற /வழக்கு நிலுவையில் உள்ள தொழிற்கல்வி ஆசிரியர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50% விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் – உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் – தொடர்பாக

பார்வை 1.அரசாணை (நிலை)எண்.127 பள்ளிக் கல்வி (பக7(1)துறை நாள்.12.07.2023.
2.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.53837/வி1/இ1/2016 நாள்.18.07.2023.

----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / நகரவை / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வுபெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் பகுதிநேர பணிக்காலத்தில் 50% விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளக்கோரி 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறைசெய்யப்பட்ட தொழிற்கல்வி ஆசிரியர்கள் சென்னை உயர்நீதி மன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 06.04.2018 பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற /வழக்கு நிலுவையில் உள்ள தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பார்வை (1)ல் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அரசு / அரசு உதவிபெறும் / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு. அரசாணை நகல்

27/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.9.

பெறுநர்
அரசு / நகரவை /அரச உதவிபெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.
நகல்.
சென்னை.6 பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with CamScanner

சுருக்கம்

பள்ளிக் கல்வி – சென்னை உயர்நீதிமன்ற / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளில் பெறப்பட்ட தீர்ப்பாணைகளை செயல்படுத்திட வேண்டி 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு / அரசு உதவி பெறும் / நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் 06.04.2018–க்குப் பிறகு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற / வழக்கு நிலுவையில் உள்ள தொழிற்கல்வி ஆசிரியர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை

அரசாணை (நிலை) எண். 127

நாள்.12.07.2023
திருவள்ளுவர் ஆண்டு–2054,
சோபகிருது வருடம், ஆனி–27.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 712, கல்வி நாள் 28.05.1990
2. அரசாணை (நிலை) எண். 967, கல்வி நாள் 16.10.1992
3. அரசாணை (நிலை) எண்.834, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, நாள் 23.09.1994
4. அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.08.1997
5. அரசாணை (நிலை) எண்.74, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.06.2002
6. சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.882,808/2017 மற்றும் பல வழக்குகளின் தீர்ப்பாணை நாள் 06.04.2018
7. அரசாணை(நிலை) எண்.194, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.09.2018
8. சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு W.A.No.158/2016 மற்றும் பல தொகுப்பு வழக்குகளின் மீதான தீர்ப்பாணை நாள் 03.12.2019
9. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண். 53837/வி1/இ1/2016, நாள் 15.09.2022, 02.11.2022 மற்றும் 28.2.2023

(த.பி.பா.,)

Scanned with CamScanner

10. வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழுவின் (LAOC) நடவடிக்கை குறிப்பு நாள் 20.1.2023
11. அரசாணை(2டி) எண்.25 பள்ளிக் கல்வித் (பக7(1)) துறை, நாள் 01.03.2023
12. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் கடித ந.க.எண்.53837/ வி1/இ1/2016, நாள் 17.5.2023 மற்றும் 30.05.2023.

**ஆணை**

மேலே ஒன்று முதல் ஐந்து வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி 01.04.2003-க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் கொண்டுவரப்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்கள், தங்களது பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதிய கணக்கில் எடுத்துக் கொண்டு ஓய்வூதியப் பலன்கள் அனுமதிக்க வேண்டி சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட பல்வேறு வழக்குகளின் மீதான தீர்ப்பாணையினை செயல்படுத்தி, 01.04.2003க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களில், பார்வை ஆறில் கண்ட உயர்நீதிமன்ற தீர்ப்பு நாளான 06.04.2018 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அத்தீர்ப்பாணையில் ஆணையிடப்பட்டவாறு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குகள் தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றுள்ள மற்றும் 06.04.2018ஆம் நாள் வரை வழக்கு தொடுத்து வழக்கு நிலுவையில் உள்ள இவர்களை ஒத்த தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு மட்டும் அவர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டினை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள அனுமதித்து மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட வரம்பு நிலை நாளான (cut off date) 6.4.2018க்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தங்களது பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டினை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளக் கோரி பல்வேறு தொழிற்கல்வி ஆசிரியர்களால் தொடரப்பட்ட வழக்குகளில் பெறப்பட்ட தீர்ப்பாணைகள் மீது தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் /சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்கண்ட நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பாணையினை செயல்படுத்தாததின்

(த.பி.பா.)

Scanned with CamScanner

காரணமாக துறைக்கெதிராக தொழிற்கல்வி ஆசிரியர்களால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தொடரப்பட்டு அவ்வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும், குறிப்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தீர்ப்பாணையினை செயல்படுத்தாமையால் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு நேர்நிற்றல் (Personal Appearance) வழங்கப்படும் சூழ்நிலைகள் ஏற்படுகிறது என்றும் மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இச்சூழ்நிலையில் உயர்நீதிமன்ற தீர்ப்பாணையை செயல்படுத்தும் பொருட்டு, ஆலோசனை வேண்டி வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழுவின் (LAOC) முன் இக்கருத்துரு 03.01.2023 அன்று சமர்ப்பிக்கப்பட்டதில் அக்குழுவானது கீழ்க்கண்டவாறு தனது ஆலோசனையினை (Suggestions) தெரிவித்துள்ளது.

"... Considering the nature of dispute and the slim chances of success, as the scope of review under Order 47 of Civil Procedure Code is very limited and also that the merits of the case are very fragile, the contempt action could be requested to be put on hold by reference to the pendency of the review application or the office could give effect to the pendency of the review application or the office could give effect to the order of the High Court and make its subject to the ultimate outcome in the Review Application.

Over all, it is suggested that better than contest, compliance of the High Court orders is a better option".

4. மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு, அரசு உதவிபெறும், நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் மற்றும் ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில் 6.4.2018க்குப் பின்னர் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்றுள்ள 454 தொழிற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் வழக்குகள் நிலுவையில் உள்ள 103 தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஆக மொத்தம் 557 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கும் அவர்களின் 50% பகுதிநேர பணிக்காலத்தினை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்குமாறும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும் பொருட்டு, மேலே பதினொன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 6.4.2018க்குப் பின்னர் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற 20 அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களது 50% பகுதி நேர பணிக்காலத்தினை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டதற்கு பின்னேற்பும் வழங்குமாறும் பள்ளிக் கல்வி ஆணையர் அரசினைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.,)

Scanned with CamScanner

11411

5. மேலும் மேலே பனிரெண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆறு நபர்களுக்கு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு ஓய்வூதியம் தொடர்பான கருத்துரு மாநில தலைமை கணக்காயருக்கு அனுப்பப்பட்ட போது 2 நபர்களுக்கு மட்டும் அரசாணை வேண்டி ஓய்வூதிய கருத்துரு திருப்பி அனுப்பப்பட்டது. எனவே மற்ற 4 நபர்களுக்கும் அரசாணை வழங்கும் பொருட்டும் மற்றும் வழக்கு தொடர்ந்து ஆணை பெறப்பட்ட 454 நபர்களுக்கும் சேர்த்து ஆக மொத்தம் 460 (454+6) நபர்களுக்கும் அவர்கள் பகுதிநேரமாக பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காட்டினை ஓய்வூதிய கணக்கிற்கு எடுத்துக் கொள்ளும் வகையில் அரசாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கோரியுள்ளார்.

6. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பெறப்பட்ட தீர்ப்பாணைகளுக்கிணங்கவும், நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை தவிர்க்க வேண்டியும், வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழுவின் கருத்தினடிப்படையிலும், பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே 6.4.2018க்குப் பின்னர் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்ற அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 20 தொழிற்கல்வி ஆசிரியர்களது 50% பகுதிநேர பணிக்காலத்தினை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி அளித்தும், 01.04.2003க்கு முன்னர் பணிவரன்முறை செய்யப்பட்ட அரசு, அரசு உதவிபெறும், நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் மற்றும் ஓய்வு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர்களில், அரசாணை (நிலை) எண்.194 பள்ளிக் கல்வித் துறை நாள்.12.09.2018-இல் குறிப்பிடப்பட்டுள்ள நாளான 6.4.2018க்குப் பின்னர் வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெற்றுள்ள 460 தொழிற்கல்வி ஆசிரியர்கள் (454+6) மற்றும் வழக்குகள் நிலுவையில் உள்ள 103 தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஆக மொத்தம் 563 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களில் பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்புக்குட்பட்டு அவர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா..)

Scanned with CamScanner

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.26266/நிதித்(PGC) துறை/2023, நாள்.12.07.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில கணக்காயர், சென்னை-18.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை.
இயக்குநர், ஓய்வூதிய இயக்குநரகம், சென்னை.
ஓய்வூதியம் வழங்கல் அலுவலர், சென்னை.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக் கல்வி (ப.க.6)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்

Scanned with CamScanner